## பாடம் 01

1. நாம் எந்தச் செயலையும் செய்யத்தொடங்கு முன் வழிபடும் கடவுள் யார்?
   - விநாயகர்
2. விநாயகருக்கு வழங்கப்படும் மறு பெயர்கள் எவை?
   - பிள்ளையார், விக்னேஸ்வரன், ஐங்கரன், ஆனைமுகன், கணபதி
3. "பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என சிறப்பிக்கப்படும் கடவுள் யார்?
   - விநாயகர்
4. ஓம் என்னும் பிரணவப்பொருளாக அமைந்தவர் யார்?
   - விநாயகர்
5. "பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்ற தொடர் இடம் பெற்ற நூல் எது?
   - வெற்றிவேற்கை
6. "வெற்றிவேற்கை" என்ற நூலின் ஆசிரியர் யார்?
   - அதிவீரராம பாண்டியன் (மன்னன்)
7. "பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
   சரண அற்புதமலர் தலைக்கணிவோமே" என்ற பாடலின் பொருள் யாது?
   - ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்கும் கருணை என்னும் பெருந்தொகையுடைய விநாயகப் பெருமானது திருப்பாதங்கள் என்னும் அற்புதமான தாமரை மலர்களை எமது தலைகளிலே சூடிக்கொள்வோம்.
8. சைவமக்களின் மரபு யாது?
   - விநாயகப்பெருமானை முதலில் வழிப்பட்டு, எந்தச் செயலையும் செய்யத்தொடங்குவது.
9. விநாயகரை வழிபடுவதனால் ஏற்படும் பலன்கள் எவை?
   - எடுத்த காரியங்கள் அல்லது செயல்கள் தடையின்றி நிறைவேறும்
   - எமது அகங்காரம் நீங்கும்
   - சகல வளங்களும் கிட்டும்

10. விநாயகருக்கு வழங்கப்பட்ட பெயர்களும் அதற்கான காரணங்களையும் தருக?
   - விநாயகர் - தனக்கு மேலே ஒரு தலைவன் இல்லாதவர்.
   - கணபதி – கணங்களின் தலைவன்
   - விக்னேஸ்வரன் - பிறரின் விக்கினங்களை (துன்பங்களை) நீக்கி அருள் செய்பவர்.
   - கணேசன் - கணங்களின் மீது அன்பு கொண்டவர்.
   - ஆனைமுகன், கஜமுகன் - யானைமுகத்தைக் கொண்டவர்.
   - பிள்ளையார் - சிவபெருமானுக்கு மூத்தமகனாக அவதரித்தமை.

11. விநாயகர் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடங்கள் எவை?
   - ஆலயகளில் பிரதிஷ்டை செய்து வழிபடல்.
   - வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, அரசமரத்தடி, ஆலமரத்தடி.

12. விநாயகர் திருவுருவத்தை இலகுவில் எவ்வாறு அமைக்கலாம்?
   - மஞ்சள், சந்தனம், சாணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம்புல்லைக் குத்தி உருவாக்குதல்.

13. கங்கை ஆற்று நீரை கமண்டலத்தில் அடைத்து வைத்துக்கொண்டு சிவபூசை செய்தவர் யார்?
   - அகத்தியமாமுனிவர்

14. அகத்தியரின் கமண்டத்தின் நீரை வெளியேற்றும்படி பிள்ளையாரை வழிபட்டவர் யார்?
   - இந்திரன்

15. இந்திரனின் வேண்டுதலின்படி பிள்ளையார் யாது செய்தார்?
   - பிள்ளையார் காக்கை வடிவில் சென்று அகத்தியாரின் கமண்டலத்தில் அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கையசைத்து விரட்டினார் காக்கை கமண்டத்தைக் காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து நீர் பெருகியது.

16. கமண்டல நீர் எவ்வாறு பெருக்கெடுத்தது?
   - கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

17. அகத்தியர் கோபத்துடன் காகத்தைத் துரத்திய போது என்ன நிகழ்ந்தது?
   - பிள்ளையார் சிறுவனாக உருமாறி நின்றார்.

18. சிறுவனைக்கண்டதும் அகத்தியர் என்ன செய்தார்?

- அகத்தியர் சிறுவனை தனது இரண்டு கைகளாலும் குட்ட நினைத்து சிறுவனை விரட்டிக்கொண்டோடினார்.

19. அகத்தியர் துரத்த ஓடிய சிறுவன் என்ன செய்தான்?

- சிறுவன், பிள்ளையாரின் உண்மை வடிவை அகத்தியருக்குக் காட்டினார்.

20. பிள்ளையாரின் வடிவைக் கண்ட அகத்தியர் என்ன செய்தார்?

- பிள்ளையாரை வணங்கி " ஓங்காரப்பொருளே" உன்னைச் சிறுவனெனக் கருதி குட்டவந்த நானே சிறுவன்" என்று சொல்லித்தலையில் குட்டிக்கொண்டார்.

21. அகத்தியர் தலையில் குட்டி வணங்கிய போது பிள்ளையார் எவ்வாறு அருள் புரிந்தார்?

- "அன்பனே இன்றுமுதல் எம் திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக்கொள்வோர் கூரிய அறிவும் சீரியசெல்வமும் பெற்று வாழ்வார்" என்று அருள்புரிந்தார்.

22. பிள்ளையாருக்குரிய சிறப்பான வழிபாட்டு முறைகள் எவை?

- நெற்றியில் மூன்று முறை குட்டி வழிபடுவது.
- தோப்புக்கரணம் போடுதல்

23. தோப்புக்கரணம் போடும் முறை யாது?

- வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலது கையினாலும், பிடித்துக்கொண்டு, மூன்று முறை தாழ்ந்தெழுந்து வழிபடுதல் தோப்புக்கரணம் போடுதலாகும்.

24. தேவர்களை அடிமையாக்கி தன்முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச்செய்தவன் யார்?

- கஜமுகன் என்னும் அசுரன் (கஜமுகாசுரன்)

25. கஜமுக அசுரனின் கொடுமையைத் தாங்கமுடியாத தேவர்கள் என்ன செய்தனர்?

- சிவபெருமானிடம் முறையிட்டனர்.

26. சிவபெருமான் தேவர்களின் முறையீட்டை கேட்டு என்ன செய்தார்?

- கஜமுகாசுரனின் செருக்கை அடக்க விநாயகரை அனுப்பினார்.

27. விநாயகர் கஜமுகாசுரனுடன் எவ்வாறு போர் செய்தார்?

- விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் புரிந்து அவனது உடலைப் பிரித்தார். பெருச்சாளி உருவெடுத்து விநாயகரை எதிர்த்தான். பின்னர் அவனது செருக்கை அடக்கி பெருச்சாளியைத் தனது வாகனம் ஆக்கினார்.

28. விநாயகர் கஜமுகனுக்கு செய்த உபதேசம் எது?

- ஞான உபதேசம்

29. விநாயகர் தேவருக்கு என்ன அருளினார்?

- என்முன் மூன்று முறை தோப்புக்கரணம் போட்டால் போதும், அவ்வாறு செய்யும் பக்தர்கள் எனது அருளுக்குப் பாத்திரமாவார்கள் என்று கூறி அருளினார்.

30. விநாயகரை எதனால் அர்ச்சிக்கலாம்?

- பல்வகை பூக்களாலும், இலைகளாலும் அர்ச்சிக்கலாம்
- அறுகம்புல்லால் அர்ச்சிக்கலாம்

31. விநாயகருக்கு மிகவும் விருப்பமான அர்ச்சிக்கும் பொருள் எது?

- அறுகம்புல்

32. விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சிக்கும் போது ஏற்படும் பலன்கள் எவை?

- எமக்கு வருகின்ற துன்பங்கள் யாவும் எளிதாக நீங்கிவிடும்.
- சகல சௌபாக்கியங்களும் கிட்டும்.

33. பின்வரும் தேவாரத்தை வரிக்கிரமமாக எழுத வேண்டும்

**1. திருச்சிற்றம்பலம்**

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே
**திருச்சிற்றம்பலம்**

**2. திருச்சிற்றம்பலம்**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.
**திருச்சிற்றம்பலம்**

# அலகுப் பரீட்சை – 01

**01.பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக.**

1. ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்குபவர்.

   01. முருகன் 02. விநாயகர் 03. சிவன் 04. விஸ்ணு

2. "பிரவணப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் - என்ற பாடல் இடம்பெற்ற நூல் எது?

   01. வெற்றிவேற்கை 03. நாலடியார்
   02. திருக்குறள் 04. திருவாசகம்

3. கங்கை ஆற்றை கமண்டலத்தில் அடைத்து வைத்து சிவபூசை செய்த முனிவர்

   01. விசுவாமித்திரர் 03. அகத்தியர்
   02. பதஞ்சலி 04. வியாசர்

4. பெருச்சாலி வடிவம் கொண்டு விநாயகரை எதிர்த்த அசுரன்

   01. நரகாசுரன் 03. தாரகன்
   02. சூரபத்மன் 04. கஜமுகாசுரன்

**02.கீறிட்ட இடம் நிரப்புக.**

(வெற்றிவேற்கை, விநாயகர், காவிரி, ஞான உபதேசம்)

01. விநாயகர் கஜமுகாசுரனுக்கு................................. செய்தார்.
02. அதிவீரராமபாண்டியன் இயற்றிய நூல்.......................... ஆகும்.
03. கமண்டலத்திலுள்ள நீரானது................................ எனப் பெருகியது.
04. தனக்கு மேலே ஒரு தலைவன் இல்லாதவர் என்பதால்.................எனப்பட்டார்.

**03.பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

01. நாம் எந்தச் செயலைச் செய்யத் தொடங்கும் முன் விநாயகரை வழிபடவேண்டும். (.........)
02. "பிரணவப்பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" எனப்போற்றப்படும் கடவுள் விநாயகர் ஆவார். (.........)
03. கஜமுகனின் வேண்டுதலின்படி விநாயகர், அகத்தியரின் கமண்டலத்தில் அமர்ந்தார். (..........)
04. விநாயகர் கஜமுகாசுரனை அழித்து, பெருஞ்சாலியை தனது வாகனமாக்கிக் கொண்டார். (.........)

**04.தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) வெற்றிவேற்கை | கமண்டலம் |
| 2) விநாயகர் | பெருஞ்சாலி உரு |
| 3) அகத்தியர் | அறுகம்புல் |
| 4) கஜமுகாசுரன் | அதிவீரராம பாண்டியன் |

**05.சுருக்கமான விடை தருக.**

01. விநாயகருக்கு வழங்கப்படும் மறுபெயர் 3 தருக?

………………………………………………………………

………………………………………………………………

………………………………………………………………

02. விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் பிள்ளையார் பிடிக்கப் பயன்படும் பொருட்கள் எவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

03. விநாயகரை வழிபடுவதனால் ஏற்படும் பலன்கள் எவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

04. தோப்புக்கரணம் போடும் முறை யாது?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

**06.பின்வரும் தேவாரத்தினை வரிக்கிரமமாக எழுதுக.**

01. "பரிந்துநன் மனத்தால் ……………………………………………."

02. "விநாயகனே வெவ்வினையை ………………………………………………"

திருச்சிற்றம்பலம்

1…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

திருச்சிற்றம்பலம்

2…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

திருச்சிற்றம்பலம்

# பாடம் ~ 02

## சைவ இல்லம்

1. சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட சமயத்தலைவர்கள் யாவர்?
    - சைவசமயத்தவர்கள்
2. சைவ இல்லம் என்பதன் பொருள் யாது?
    - சைவர்கள் வாழும் இடம்
3. சைவ இல்லத்தின் பண்புகள் எவை?
    - புனிதத்தன்மை
    - பண்பு நிறைந்த இடம்
    - தெய்வீக சந்நிதியாக இருத்தல்
    - கலைக்கோயிலாக இருத்தல்
    - நற்பழக்கவழக்கங்களும் பயிற்சி நிலையமாகவும் இருத்தல்.
4. சைவ இல்லங்களில் அன்றாடம் கடைபிடிக்கவேண்டிய பழக்கவழக்கங்கள் எவை?
    - விளக்கேற்றுதல்
    - இறைவழிபாடு செய்தல்
    - திருமுறை ஓதுதல்
    - பெற்றோரை வணங்குதல்
5. சைவ இல்லங்களிலுள்ள சுவாமி அறை எவ்வாறு காணப்படும்?
    - இஷ்ட தெய்வங்களின் படங்களோ, விக்கிரகங்களோ வைக்கப்பட்டிருக்கும்.
6. சுவாமி அறையினுள் ஆற்றப்படும் கருமங்கள் எவை?
    - அன்றாடம் நீராடி, திருநீறுதரித்து, அத்தெய்வங்களை காலையும், மாலையும் திருவிளக்கேற்றி,நறுமலர் வைத்து, தூபமிட்டு தோத்திரம் ஓதி இறைவழிபாடு செய்தல்.
7. விளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உலோகங்கள் எவை?
    - பித்தளை, செம்பு, வெள்ளி

8. உலோகம் அல்லாத வேறு எந்த விளக்குகள் பயன்படுத்தப்படும்?

- மண்ணாலான விளக்குகள்

9. திருவிளக்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

- திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருப்பது சிறந்ததாகும். நாள்தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒரு சுடர் இருப்பதும் போதுமானதாகும்.

10. திருவிளக்கு எவ்வாறு விளக்கேற்றல் வேண்டும்?

- திருவிளக்கேற்றுவதற்கு நெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், என்பவற்றை பயன்படுத்தி பஞ்சினால் திரியிட்டு விளக்கேற்றவேண்டும்.

11. சைவஇல்லத்தில் இறைவழிபாடு எவ்வாறு ஆற்றவேண்டும்?

- குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழிபாட்டினை மேற்கொள்ளவேண்டும்.

12. இறைவழிபாடு யாருக்காகவெல்லாம் வேண்டுதல் செய்தல் வேண்டும்?

- எமக்காகவும், குடும்பத்தவர், அயலவர், நண்பர் அனைவருக்காகவும்

13. இறைவழிபாட்டில் எதனை வேண்டி பிரார்த்திக்க வேண்டும்?

- அனைவரும் நலமாவும், நல்லவர்களாகவும் வாழப் பிரார்த்திக்க வேண்டும்.

14. இறைவழிபாட்டினை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்?

- திருமுறைப்பாடல்களை/பஞ்சப்புராணத்தை முறையாக ஓதி வழிபட வேண்டும்.

15. பஞ்சபுராணங்களும் எவை?

- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

16. தோத்திரங்களை ஓதும் போது கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு யாது?

- தோத்திரத்தை ஓதுவதற்கு முன்பும், ஓதிய பின்னும் ‘‘திருச்சிற்றம்பலம்’’ சொல்ல வேண்டும்.
- எழுந்து நின்று கைகூப்பி பக்தியோடும், பண்போடும் ஓதுதல் வேண்டும்.

17. தினமும் இறைவழிபாடு செய்வதன் அவசியம் யாது?

- நல்லொழுக்கம், மனச்சாந்தி பெறவும், பாவத்தை போக்கி நல்வாழ்வு பெறவும், தினமும் இறைவழிபாடு மேற்கொள்ள வேண்டும்.

18. இறைவனை குறிப்பாக எப்போது வழிபடவேண்டும்?
    - காலையும், மாலையும் வழிபடவேண்டும்.
19. இறைவனை வழிபட்ட பின்னர் யாரை வழிபடவேண்டும்?
    - தாய், தந்தையாகிய பெற்றோரை வழிபடவேண்டும்
20. பெற்றோரை வழிபடுவதனால் ஏற்படும் பலன் யாது?
    - எம்மை நன்கு வாழவைக்கும்.
21. பெற்றோருக்கு உதவி செய்வதனால் எம்மிடையே ஏற்படும் நற்பழக்கங்கள் எவை?
    - அன்பு, பொறுமை, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு முதலிய நற்பழக்கங்கள் வளரும்.
22. சைவ இல்லத்தில் நாம் சிறப்பாக எமது கடமைகளை செய்வதனால் ஏற்படும் நன்மைகள் எவை?
    - சைவ இல்லத்தில் அன்பும், சமாதானமும், ஒற்றுமையும் நிலைத்து நிற்கும்.
23. சைவ இல்லத்தில் இருந்து நாம் கடைப்பிடிக்க வேண்டியது யாது?
    - நாமும் அன்றாடம் எமது இல்லத்தில் திருவிளக்கேற்றி இறைவனைத் தொழுது நல்வர்களாக வாழ்தல்.
24. விஷேட தினங்களின் போது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் எவை?
    - நமது வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மைப்படுத்த வேண்டும்.
    - நீராடி, புத்தாடை அணிதல் வேண்டும்.
    - வீட்டு வாசலில் கோலம் போடுதல்.
    - நிறைகுடம் வைத்தல்.
    - திருவிளக்கேற்றல்
    - தூப, தீபம் காட்டுதல்.
    - புதிய பாத்திரங்களில் உணவை சமைத்து இறைவனுக்கு நிவேதனமாக்கி படைத்தல்.
    - உணவை ஏழை, எளியவர்களுக்கு பகிர்ந்தளித்தல்.
    - உறவினர் சூழ் பகிர்ந்து உண்ணுதல்.

- உறவினர் வீடு செல்லுதல்.
- பெரியோர்களிடம் வணங்கி ஆசிர்வாதம் பெறுதல்.

25. சைவ சமயத்தவர்களின் விசேஷ தினங்கள் எவை?
    - பண்டிகைகள், விரதங்கள், மங்கலச்சடங்குகள்
26. விசேஷ தினங்கள் எவற்றுக்கு உதவுகின்றது?
    - இறைசிந்தனைக்கும், சைவசமயப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்வில் கடைப்பிடிப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன.
27. பண்டிகைகளுக்கு சில உதாரணங்கள் தருக?
    - தைப்பொங்கள், புதுவருடப்பிறப்பு, தீபாவளி
28. விரதங்களுக்கு சில உதாரணங்கள் தருக?
    - நவராத்திரி, சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகசதுர்த்தி, கௌரிவிரதம்
29. மங்கலச் சடங்குகளுக்கு சில உதாரணங்கள் தருக?
    - திருமணச்சடங்கு, பூப்புனித நீராட்டுவிழா, பெயர் இடுதல், ஏடுதொடக்குதல்.

## அலகுப்பரீட்சை – 02

- **பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக.**

1) சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம்

| | |
|---|---|
| 1. சைவம் | 3. வைஸ்னவம் |
| 2. சாக்தம் | 4. காணாபத்தியம் |

2) சைவர்கள் வாழும் இடம் எப்பெயர் பெறும்?

| | |
|---|---|
| 1. கோயில் | 3. சைவமன்றம் |
| 2. சைவ இல்லம் | 4. சைவகிராமம் |

- **கீறிட்ட இடத்தை நிரப்புக.**

(இறைவழிபாடு செய்தல், வாழ்வு நலம் பெறும், எம்மை நன்கு வாழவைக்கும்)

1. சைவ இல்லங்களில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டியது……………………………..ஆகும்.
2. பெற்றோரை வழிபடுவதனால்………………………………………

➢ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. சைவ இல்லம் தெய்வீக சந்நிதியாக இருத்தல் வேண்டும். (…….)
2. இறைவனை காலையும், மாலையும் வழிபடவேண்டும். (……)
3. பண்டிகைகளில் ஒன்றாக சிவராத்திரி உள்ளது. (……)
4. திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருப்பது சிறந்ததாகும். (……..)

➢ **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. சைவ இல்லம் | பித்தளை |
| 2. உலோகம் | தேவாரம் |
| 3. பஞ்சபுராணம் | பெயர் சூட்டல் |
| 4. மங்கலச்சடங்கு | நவராத்திரி |
| 5. விரதம் | புனிதத்தன்மை |

## பகுதி ~2

➢ **பின்வரும் வினாக்ளுக்கு விடை தருக.**

1. சைவ இல்லத்தின் பண்புகள் 3 தருக.

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

………………………………………………………………………………..

2. சைவ இல்லங்களில் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் 3 தருக.

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

3. சுவாமி அறையினுள் ஆற்றப்பட வேண்டிய கருமங்களை சுருக்கமாக விபரிக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

4. திருவிளக்கு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

5. விசேஷட தினங்களின் போது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் 5 தருக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

6. திருவிளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய எண்ணெய் வகைகள் எவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

………………………………………………………………………………………..

7. பஞ்சபுராணங்கள் எவ்வொழுங்கில் பாடப்பட வேண்டும்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

………………………………………………………………………………………..

8. சைவசமயத்தவர்களின் விசேஷட தினங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

9. சைவ இல்லத்தில் சிறப்பாக நம் கடமைகளை செய்வதனால் ஏற்படும் நன்மைகள் எவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

10. தோத்திரங்களை ஓதும் போது கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

…………………………………………………………………………………………..

## பாடம் ~ 03

## நாளாந்த செயன்முறைகள்

1. "அரிது அரிது மானுடராதல் அரிது..." எனக்கூறியவர் யார்?
   - ஔவையார்
2. மானிடப் பிறப்பை நமக்கு அளித்தவர் யார்?
   - பரம் பொருளாகிய சிவபெருமான்
3. மானிடப்பிறப்பு எடுத்த நமது முக்கிய கடமைகள் எவை?
   - பரம் பொருளாகிய சிவபெருமானின் திருவடிகளை அடைதல்.
   - சிவதிருவடிகளை சிந்தித்தல், துதித்தல், வணங்குதல்.
4. இறைவனை நினைப்பதற்கேற்ற வழிமுறைகள் எவை?
   - சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல்.
   - நித்திரை விட்டெழும் போது ''சிவ சிவ'' என்று கூறி இறைவனை மனதில் தியானித்தல்.

- திருநீறு முதலான சிவசின்னங்களைச் சிவசிந்தையுடன் தரித்துக்கொண்டு இறைவனை வழிபடவேண்டும்.

5. சிவசின்னங்கள் எவை?
    - விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து மந்திரம்
6. விபூதி, உருத்திராக்கம் என்பனவற்றின் சிறப்பு யாது?
    - எமது அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளின்றும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும், அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்களாகும்.
7. விபூதி, உருத்திராக்கம் என்பன எவ்வேளைகளில் தரிக்கவேண்டும்?
    - நீராடியவுடன், பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் பக்தி சிரத்தையுடன் தரித்துக் கொள்ளல் வேண்டும்.
8. விபூதி (திருநீறு) தரிக்கும் முறைகள் எவை?
    - உத்தூளனம்
    - திரிபுண்டரம்
9. ‘‘உத்தூளனம்’’ என்றால் என்ன?
    - திருநீற்றை நெற்றியில் பரவிப் பூசுதல் உத்தூளனம் எனப்படும்.
10. ‘‘திரிபுண்டரம்’’ என்றால் என்ன?
    - திருநீற்றை நெற்றியில் மூன்று குறியாகத்தரிப்பதனை திரிபுண்டரம் எனப்படும்.
11. திருநீறு அணிவதற்கு உத்தமமான திக்கு (திசை)கள் எவை?
    - வடக்கு
    - கிழக்கு
12. திருநீறு எவ்வாறு தரிக்க வேண்டும்?
    - திருநீறு அணியும் போது உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு சிவனை நினைத்து நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து ‘‘ சிவ சிவ’’ என்று கூறி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.

13. இறைவனை எவ்வாறு வழிபடுதல் வேண்டும்?

- இறைவனை வழிபடும் போது அன்றலர்ந்த புதிய பூக்களை இறைவனின் திருவடிகளுக்குச் சூட்டி, தூப தீபங்காட்டி திருமுறைப்பாடல்களை அன்புடன் மனம் கசிந்துருகிப் பாடி வழிபடுதல்வேண்டும்.

14. நாம் இறைவனிடம் எவற்றை வேண்டி பிராத்திக்க வேண்டும்?

- நமது நலத்துக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதோடு, உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் நோய் நொடிகள் இன்றி நலமாகவும், வளமாகவும், நல்லவர்களாகவும் வாழப்பிரார்த்திக்க வேண்டும்.

15. உணவு உண்ணும் போது பாடவேண்டிய தேவாரம் எது?

"அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்....." என்ற தேவாரம்

16. ஏழைகளுக்கும், பிராணிகளுக்கும் உணவு வழங்குவதனால் ஏற்படும் பலன்கள் எவை?

- நல்வழியில் வாழ வழிகாட்டும்
- பிறவித்துன்பத்தில் இருந்து நீக்கி இறைவனோடு சேர்க்கும்.
- பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கும்.

17. நாம் தினம்தோறும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் எவை?

- கடவுளைத் தியானித்தல், புனிதம் பேணல், சிவசின்னங்களை தரித்தல், கடவுளையும், பெற்றோரையும் வழிபடுதல், ஏழைகளுக்கு உதவுதல்.

## அலகுப் பரீட்சை – 03

- **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

1) "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக்கூறியவர்

| | |
|---|---|
| 1. ஔவையார் | 3. கபிலர் |
| 2. பாரதியார் | 4. பரண |

2) மானிடப்பிறப்பை நமக்கு அளித்தவர்

| | |
|---|---|
| 1. பிள்ளையார் | 3. முருகன் |
| 2. சிவன் | 4. விஸ்ணு |

- **கீறிட்ட இடத்தை நிரப்புக.**

(சிவசின்னங்கள், திரிபுண்டரம், உத்தூளனம்)

3) விபூதி, உருத்திராக்கம் என்பன...............................ஆகும்.
4) விபூதியை நெற்றியில் பரவிப்பூசுதல்.....................................எனப்படும்.

- **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

5) நித்திரை விட்டெழும் போது "சிவ சிவ" என இறைவனை தியானித்தல் வேண்டும். (……...)
6) திருநீறு அணிவதற்கு உத்தமமான திக்கு தெற்கு ஆகும். (……..)
7) பிறவியை எமக்களித்தவர் பரம்பொருளாகிய சிவபெருமான் ஆவார்.(………)
8) இறைவனை நினைப்பதற்குரிய ஏற்ற வழிமுறைகளை நம் முன்னோர்கள் ஒழுங்குபடுத்தவில்லை.(………)
9) உணவு உண்ணும் போது "அன்னம் பாலிக்கும்………" என்ற தேவாரம் பாடவேண்டும். (……..)
10) நமக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதைப் போல் பிறருக்காகவும் பிரார்த்தித்தல் வேண்டும். (……..)

## பகுதி– II

1. மானிடப்பிறப்பு எடுத்த நமது முக்கிய கடமைகள் எவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

2. விபூதி, உருத்திராக்கம் என்பவற்றின் சிறப்பு யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

3. விபூதி தரிக்கும் முறைகள் எவை?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

4. திருநீறு எவ்வாறு தரிக்க வேண்டும்?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

5. நாம் வாழ்வில் கடைப்பிடிக்கும் நற்பண்புகள் எவை?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

## பாடம் ~ 04
## சமூகம் சார்ந்த சமய விழுமியங்கள்

1) விழுமியம் என்றால் என்ன?

- மனித வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்படும் பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியம் எனப்படும்.

2) விழுமியத்தின் சிறப்பு யாது?

- உயர்வானவை, மேன்மையானவை உன்னதமானவை, அவை உயிரினும் மேலான பெறுமதியுடையவை.

3) ஒழுக்கத்தின் மேன்மையை கூறும் குறள் ஒன்று தருக?

- ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்.
  உயிரினும் ஓம்பப்படும்.

4) விழுமியப் பண்புகள் தருக?

- உண்மை பேசுதல்

- பெரியோரைக் கனம் பண்ணுதல்
- நன்றி மறவாமை
- தருமம் செய்தல்

5) “பாலபாடம்” என்னும் நூலை எழுதியவர் யார்?
   - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

6) “மெய்மை” என்னும் கதை எந்நூலில் உள்ளது?
   - இரண்டாம் பாலபாடத்தில் உள்ளது

7) “மெய்மை” என்னும் கதை எதனை விளக்குகிறது?
   - சமய விழுமியப் பண்புகளில் ஒன்றான உண்மை பேசுதலின் சிறப்பினைப் பற்றி விளக்குகின்றது.

8) “மெய்மை” என்ற கதையின் படிப்பினைகள் யாவை?
   - உண்மை பேசி உத்தமராக வாழ்வோம்
   - உண்மையே இறுதியில் வெற்றி பெறும்
   - உண்மையைப் பேசி நன்மையைப் பெற வேண்டும்.

9) “மெய்மை” என்ற கதையில் வரும் பாத்திரங்கள் யாவர்?
   - முருகன்
   - கிருஷ்ணன்
   - பெரிய மனிதர்

10) முருகனிடம் காணப்பட்ட நற்பண்புகள் எவை?
    - பொய் சொல்லாமை/ உண்மை பேசுதல்
    - பொய்யாய் நடந்து கொள்ளாமை

11) முருகனின் நற்பண்புகளுக்குரிய எடுத்துக்காட்டு ஒன்று தருக?
    - முருகன் தன்னிடமுள்ள விற்பனைக்குரிய ஒரே ஒரு முலாம்பழம் பழுதடைந்தமையை அதனை வாங்க வந்த பெரிய மனிதரிடம் கூறியமை

12) உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் எவை?
    - முருகனுக்கு ஒரு வாடிக்கையாளர் சேர்ந்தார்
    - பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான தொழியாளியாக சேர்ந்து. பதவி உயர்ந்து, வர்தகத்தில் பங்காளியாகவும் மாறியமை.

- முருகனுக்கு இலாபம் கிடைத்தது.

13) பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட நட்டம் யாது?
- கிருஷ்ணனுக்கு ஒரு வாடிக்கையாளர் இல்லாமல் போய்விட்டார்.
- பொய் பேசியதால் நட்டம் உண்டாகியது.
- நல்ல மனிதர்களது நட்பு கிடைக்கவில்லை.
- தொழிலில் உயர்வோ, மாற்றமோ ஏற்படவில்லை.

14) பெரியோர் எனப்படுவோர் யாவர்?
- பெற்றோர்,குரு,வயதில் மூத்தோர்.

15) பெரியோரை மதித்தல், கனம் பண்ணுதல் என்றால் என்ன?
- பெற்றோர்களின் கால்களில் வீழ்ந்து வணங்குதல்
- பெரியோர்களின் சொற்கேட்டு, கீழ்ப்பணிந்து நடத்தல்.
- மரியாதை செலுத்துதல், உதவி செய்தல்
- பெரியோரைக் கண்டவுடன் வணக்கம் செலுத்துதல் இருக்கையில் இருந்து எழும்புதல்.

16) பெற்றோர்களுக்கு நாம் செய்யும் உதவிகள் சில தருக?
- தினமும் வீட்டைச் சுத்தம் செய்தல்.
- உணவு உண்ட பாத்திரத்தைக் கழுவி வைத்தல்.
- அழுக்கான உடைகளைத் துவைத்தல்.

17) நாம் கனம் பண்ண வேண்டிய பெரியோர்களில் முதன்மையானவர் யார்?
- குரு

18) குருவுக்கு நாம் செய்யும் மரியாதைகள் எவை?
- குருவிடம் பக்தியுடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.
- எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்.
- அவர்கள் தரும் பணிகளை ஒழுங்காக செய்வதுடன் சிறப்பாகவும் ஆர்வத்துடனும் கற்றல்.
- வேறு இடங்களில் காணும் போது வணக்கம் செலுத்துதல்.

19) ஆலயங்களில் நாம் சிறப்பாக மதிக்கப்பட வேண்டியவர்கள் யார்?
- மதகுருமார்கள்.

20) மதகுருமார் விபூதி பிரசாதம் தரும்போது எவ்வாறு வாங்க வேண்டும்?

- கும்பிட்டு, இடக்கைமேல் வலக்கையை வைத்து இரு கைகளாலும் வாங்க வேண்டும்.

21) பெரியவர்களிடம் நாம் நடந்து கொள்ளும் முறைகள் எவை?

- பெரியோரைக் கண்டவுடன் இருக்கையில் இருந்து எழ வேண்டும்.
- முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறி, அடக்கத்துடன் வரவேற்க வேண்டும்.
- அவர்களுக்குரிய பணிவிடை செய்ய வேண்டும்.
- பெரியவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, அவர்களுடன் வாயில் வரை சென்று வழியனுப்ப வேண்டும்.
- விழாக்கள், பண்டிகைக் காலங்களில் பெரியவர்களின் ஆசிர்வாதம் பெற வேண்டும்.
- பிரயாணங்களின் போது எழுந்து ஆசனத்தை கொடுக்க வேண்டும்.

22) நாம் பெரியோர்களுக்கு முன்னால் செய்யத் தகாத செயல்கள் எவை?

- உயர்ந்த ஆசனத்தில் இருத்தல்.
- காலை நீட்டிக் கொண்டிருத்தல்.
- கால் மேல் கால் போட்டுக் கொண்டிருத்தல்.
- எதிர்த்துப் பேசுதல்.
- கைகாட்டிப் பேசுதல்.

23) "நன்றி மறவாமை" பற்றி கதை கூறியவர் யார்?

- வியாசர்

24) இக்கதையில் வரும் பாத்திரங்களைக் குறிப்பிடுக?

- வேடன்,கிளி, மரம், தேவேந்திரன்.

25) தேவர்களின் அரசன் யார்?

- தேவேந்திரன்.

26) வேடன் எங்கே வேட்டையாடச் சென்றான்?

- காசி நகரின் எல்லைப் பகுதியில் இருந்த வனத்திற்கு வேட்டையாடச் சென்றான்.

27) வேடன் மானுக்கு எய்த அம்பின் நிலை யாது?

- வேடன் எய்த அம்பானது குறிதவறி ஒருமரத்தில் பாய்ந்து ஆழமாகப் பதிந்தது.

28) விஷம் தடவிய அம்பு படுவதற்கு முன் மரத்தின் நிலை யாது?

- செழித்து வளர்ந்து காய் கனிகளுடன் பூத்துக் குலுங்கி, பல பறவைகளுக்கு அடைக்கலம் கொடுத்து வந்தது.

29) விஷம் தடவிய அம்பு பட்ட மரம் எவ்வாறு காணப்பட்டது?

- கொஞ்சங் கொஞ்சமாகக் களையிழந்து பட்டுப்போனது.

30) மரம் பட்டுப் போனதனால் என்ன நிகழ்ந்தது?

- மரத்தில் அதுவரை இருந்த அனைத்து பறவைகளும் வேறொரு இருப்பிடத்தைதேடி பறந்து சென்று விட்டன.

31) மரத்தோடு இறுதிவரை இருந்த பறவை எது?

- கிளி

32) கிளி ஏன் அந்த மரத்தை விட்டுச்செல்லவில்லை?

- மரம் செழித்து வளர்ந்திருந்தகாலத்தில் தனக்கு உணவாக கனிகளையும் உறைவிடத்தையும் தந்தது எனவே பட்டுப்போனதும் அதைவிட்டுச் செல்லாது அம்மரத்தோடே இருந்தது.

33) பட்ட மரத்தோடு இருந்த கிளியின் நிலை யாது?

- காய் கனிகள் மரத்தில் கிடைக்காமல் போனதால் உணவில்லாமல் அந்தக் கிளியும் தன்பலத்தை இழக்க ஆரம்பித்தது. மிகவும் நொய்ந்து போன நிலையிலும், கிளி அந்த மரத்தை விட்டு அகலாமல் இருந்தது.

34) பட்ட மரத்தையும், நொய்ந்த கிளியின் நிலையையும் கவனித்தவர் யார்?

- தேவர்களின் அரசனான தேவேந்திரன்

35) தேவேந்திரனுக்கு வியப்பு ஏற்பட்டமைக்கான காரணம் யாது?

- மனிதர்களே கருணை இல்லாமல் இருக்கும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு கிளியா? என கிளியின் செயலைக்கண்டு வியந்தார்.

36) இக்கதையில் இருந்து புலப்படும் விடயம் யாது?

- நன்றி மறவாமை என்பது எல்லா உயிர்களிடத்துமே காணப்படுவதோடு குற்றமும் குணமும் சேர்ந்தே இருக்கும் என்று புலப்படுத்தப்படுகிறது.

37) ஆச்சரியமடைந்த தேவேந்திரன் என்ன செய்தான்?

- மானிட வடிவம் பூண்டு, கிளி வசித்து வந்த பட்டுப்போன மரத்தை நோக்கி நடந்தான்.

38) தேவேந்திரனை கண்ட கிளி யாது கூறியது?

- "தேவேந்திரனுக்கு நல்வரவு" என்றும் "தேவலோக அரசரே! தாங்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை என்னுடைய தவ வலிமையால் நீங்கள் தான் தேவேந்திரன் என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்று கூறியது.

39) தேவேந்திரன் கிளியிடம் கேட்ட விடயம் யாது?

- "கிளியே இந்த மரம் பட்டுப்போய் காய்கள் எதுவும் இனி வர வழியில்லாமல் ஆகிவிட்டது. இனியும் எதற்காக இந்த மரத்திலேயே இருந்துகொண்டிருக்கிறாய்? இங்கு இருந்து மற்றப் பறவைகள் எல்லாம், வேறு நல்ல மரங்களைத் தேடிப் பறந்து விட்டன. நீயும் அதேபோல் உண்ணக்கனிகள் உள்ள வேறு எதாவது மரத்திற்குச் சென்று விடவேண்டியது தானே" என்று கேட்டார்?

40) தேவேந்திரனுக்கு கிளி கூறிய பதில் யாது?

- "தேவேந்திரா! என் நற்குணங்கள் தான் எனக்கு உங்களை அடையாளம் காட்டியது அப்படியிருக்கும் போது தீய வழியில் நான் ஏன் செல்ல வேண்டும்? நான் பிறந்ததில் இருந்து இன்றுவரை இந்த மரம்தான் நான் உண்பதற்கான காய்களும், கனிகளும் இருக்க இடமும் கொடுத்துக் காப்பாற்றி வந்தது. இப்படிப்பட்ட மரத்தை விட்டு நான் எப்படிச் செல்வது? நன்றி மறத்தல் என்பது எப்பேற்பட்ட தீய குணம் எந்தத் தவறைச் செய்தாலும் அதற்குப் பரிகாரம் உண்டு ஆனால் நன்றி மறந்தால் அந்தத் தவறுக்குப் பரிகாரமே கிடையாதே! இது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் என்னிடம் இப்படிக் கேட்கலாமா? என்று கிளி கூறியது.

41) தேவேந்திரன் கிளியின் பதிலைக் கேட்டு என்ன கூறினான்?

- கிளியை நோக்கி "உன் நல்ல குணத்தை எண்ணி மகிழ்வுறுகிறேன். உனக்கு ஏதாவது வரம் தர என் மனம் எண்ணுகிறது. என்ன வரம் வேண்டுமோ கேள் என்றான்.

42) கிளி இந்திரனிடம் கேட்ட வரம் என்ன?

➢ “பட்டுப்போன இந்த மரம் பழைய படி பூத்துக்குலுங்கும் வளமான மரமாக மாற வேண்டும்.” அதுவே எனது விருப்பமும் வரமும் ஆகும்” என்று கேட்டது.

43) கிளியிடம் உமக்கு பிடித்த பண்புகளை எழுதுக?

➢ நன்றி மறவாமை
➢ தீய வழியில் செல்லாமை
➢ தனக்காக அன்றி பிறர் நன்மைக்காக வாழ்வது.

44) நாம் செய்யும் பணிகளில் முதன்மையானது எது?

➢ தருமம்

45) “அறம் செய்ய விரும்பு” எனக் கூறியவர் யார்?

➢ ஔவையார் - “ஆத்திசூடியில்” கூறியுள்ளார்.

46) “தருமம்” பற்றிக் கூறும் இதிகாச நூல் எது?

➢ மகாபாரதம்

47) மகாபாரதத்தில் அறத்தில் சிறந்தவராக விளங்குபவர் யார்?

➢ தருமர்

48) பாண்டவர்கள் எந்தப் போரில் கௌரவர்களை வென்றனர்?

➢ குருஷேந்திரப் போரில்

49) தருமர் கௌரவர்களை வெற்றி கொண்டபின் யாது செய்தார்?

➢ அஸ்வமேத யாகம் செய்தார்.

50) தருமர் அஸ்வமேத யாகத்தின் பின்னர் என்ன செய்தார்?

➢ எட்டுத் திக்கிலிருந்தும் வந்திருக்கும் ஏழை எளியவர்களுக்கு தானம் செய்தார்.

51) தருமரின் யாகசாலைக்குள் வந்த விலங்கு எது?

➢ கீரி

52) கீரியின் உடல் எவ்வாறு காணப்பட்டது?

➢ பாதி உடல் தங்கமாக மின்னியவாறு காணப்பட்டது.

53) தானம் நடைபெற்ற இடத்தில் கீரி புரண்டதற்கான காரணம் யாது?

➢ மிகப்பெரும் தானம் நடைபெற்ற இடத்தில் புரண்டால் மீதி உடலும் தங்கமாக மாறி மின்னும் என்ற நம்பிக்கையால் புரண்டது.

54) கீரியின் பாதி உடல் புரண்டும் ஏன் தங்கமாக மாறவில்லை?

- தருமரது யாகசாலையில் தானம் முழுமையாக நடைபெறவில்லை.

55) கீரியின் பாதி உடல் எவ்வாறு தங்கமாகியது?

- உஞ்சவிருத்தி பிராமணரின் குடும்பத்தில் மனைவி, மகன், மருமகள் என நான்கு பேர் இருந்தார்கள், ஒரு சமயத்தில் கடும் பஞ்சம் வந்து அவர்கள் பல நாள் பட்டினி கிடக்க நேரிட்டது. ஒரு நாள் ஒருபடி சோளம் கிடைக்க அந்தச் சோளத்தை மாலாக அரைத்து அதை நான்காக பிரித்து இறைவனை வணங்கி சாப்பிட அமர்ந்தார்கள், அந்த நேரத்தில் கடும்பசியோடு ஒருவர் அந்த வீட்டுக்கு வரவே அவரை வரவேற்று உபசரித்த குடும்பத் தலைவர் தன் பங்கு மாவை அவருக்குச் சாப்பிடக் கொடுத்தார். அது வந்தவருக்குப் போதாமல் போகவே அடுத்ததாக மனைவி, பின் மகன் அதன் பின் மருமகள் என மற்றவர்களுக்கும் தங்கள் பங்கு மாவை பசியோடு வந்தவருக்கு முழுமையாகக் கொடுத்து விட்டனர். அப்படித் தருமம் நடந்த அந்த வீட்டில் பரிமாறும் போது என் பாதி உடல் தங்கமாகியது எனக் கூறியது.

56) கீரியின் உடம்பில் நிகழ்ந்த மாற்றம் என்ன?

- கீரியின் பாதி உடல் தங்கமாக மின்னியது.

# அலகுப்பரீட்சை ~ 04

## பகுதி – I

- **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

1. "பாலபாடம்" என்னும் நூலை எழுதியவர்?

| | |
|---|---|
| 1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 3) சுவாமி விவேகானந்தர் |
| 2) சுவாமி விபுலானந்தர் | 4) இராமகிருஸ்ணர் |

2. "நன்றி மறவாமை" பற்றிய கதையைக் கூறியவர் யார்?

| | |
|---|---|
| 1) அகத்தியர் | 3) பரஞ்சோதி |
| 2) வியாசர் | 4) விசுவாமித்திரர் |

- **கீறிட்ட இடத்தை நிரப்புக.**

(மெய்மை, நன்றிமறவாமை, குரு, தேவேந்திரன், பரசுராமர்)

3. தேவர்களின் தலைவனாக……………………….விளங்குகின்றார்.
4. இரண்டாம் பாலபாடத்தில்…………………..என்னும் கதை உள்ளது.

- **பின்வருவன சரியாயின்(✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

5. சமய விழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம் பண்ணுதல் சிறந்த பண்பாகும்.(…….)
6. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும்போது அமர்ந்திருக்க வேண்டும்.(……..)

- **தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 7. | விழுமியப்பண்பு | கிளி |
| 8. | பெரியோர் | அஸ்வமேதயாகம் |
| 9. | தேவேந்திரன் | குரு |
| 10. | தருமர் | நன்றிமறவாமை |

## பகுதி – II

1.உங்கள் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு நீங்கள் எவ்வாறான உதவிகளைச் செய்கின்றீர்கள்?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

……………………………………

2.பெரியோர்கள் முன்னால் தவிர்க்க வேண்டிய செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

……………………………………

3.கிளி இந்திரனிடம் கேட்ட வரம் என்ன?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

…………………………………………..

4.கீரியின் உடம்பில் நிகழ்ந்த மாற்றம் என்ன?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

…………………………………………..

5.குருவுக்கு நாம் செய்யும் மரியாதைகள் மூன்று தருக?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

…………………………………………..

## பாடம் ~ 05
## வாழ்வியல் சடங்குகள்

1.வாழ்வியல் சடங்கு என்றால் என்ன?

- சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள் வாழ்வியல் சடங்குகள் எனப்படும்.

2.வாழ்வியல் சடங்குகளின் பண்புகள் எவை?

- மனித வாழ்க்கையை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழச் செய்யும்.
- மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படும்.
- சமய குருவின் துணையுடன் இயற்றப்படும்.

3.வாழ்வியல் சடங்குகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

- இரண்டு வகைப்படும்
  1. மங்கல கருமங்கள் /சுபகருமங்கள்
  2. அமங்கல கருமங்கள்

4.மங்கல/சுப கருமங்கள் எவை?

- பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுதல்
- காது குத்துதல்.
- சோறூட்டல்
- ஏடு தொடக்குதல்.

5.அமங்கல கருமங்கள் எவை?

- அந்தியேட்டி
- மாளயம்
- திவசம்
- மரணக் கிரியைகள்

6.பெயர் சூட்டுதல் எப்போது நடை பெறுகின்றது?

- குழந்தை பிறந்து 31 ஆம் நாள் துடக்குக் கழித்த பின் குழந்தைக்கு பெயர் சூட்டும் சடங்கு இடம்பெறுகிறது.

7.பெயர் சூட்டுதல் வேறு எவ்வாறு அழைப்பர்?

- நாமகரணம்

8.பெயர் சூட்டும் சடங்கின் முறையினை சுருக்கமாக தருக?

- பெயர் சூட்டும் சடங்கானது ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும்.
- இறைவனுக்கு வழிபாடு நடத்தப்படும்.
- தாய்மாமன் அல்லது ஒரு பெரியவர் மடியில் குழந்தையை வைத்து தெரிந்தெடுத்த பெயரை குழந்தையின் வலது காதில் மூன்று முறை கூற தொடர்ந்து எல்லோரும் பெயரை ஏற்றுச் சொல்வர்.

9.பெயரின் முக்கியத்துவம் யாது?

- பெயர் மந்திரம் போன்றது.

10.பெயரின் பண்புகள் எவை?

- பொருளுடையதாக இருத்தல் வேண்டும்.
- உயர்ந்த உத்தமமானதாக இருத்தல்.
- மதிக்கப்பட வேண்டும்.

11.காது குத்துதல் எப்போது இடம்பெற வேண்டும்?

- குழந்தை பிறந்த ஆறாம், ஏழாம், எட்டாம், மாதங்களில் ஒரு சுப வேளையில் இடம் பெற வேண்டும்.

12.காது குத்துதலுக்கு வழங்கப்படும் மறுபெயர் யாது?

- கர்ண வேதனம்

13.காது குத்துவதன் நோக்கம் எவை?

- சில நோய்களின் நிவர்த்திக்காக.
- தமிழ் பண்பாட்டைப் பேணுதல்.
- அழகை ஏற்படுத்தல்.

14.காது குத்துவதற்கு சிறப்பான நாள் எது?

- தைப்பூச நாள்

15.சோறூட்டும் சடங்கு எப்போது நடை பெறுகிறது?

- குழந்தை பிறந்து 6வது மாதத்தில் வரும் சுப முகூர்த்தத்தில் சோறூட்டும் சடங்கு நடைபெறும்.

16.சோறூட்டும் சடங்கிற்கு வழங்கப்பட்ட மறு பெயர் யாது?

- அன்னப்பிராசனம்.

17.சோறூட்டல் நடைபெறும் இடங்கள் எவை?

- ஆலயம்,வீடு.

18.சோறூட்டல் எவ்வாறு நடைபெறுகிறது?

- அரிசி, சக்கரை, கற்கண்டு, நெய் ஆகியவை கொண்டு அமுது பொங்கி இறைவனுக்கு படைத்து பூசையில் வைத்த பிரசாதத்தை தந்தை அல்லது தாய்மாமன் குழந்தைக்கு மூன்று முறை ஊட்டல் சோறூட்டல் எனப்படும்

19.சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?

- குழந்தை எக்காலத்தும் உணவுக்கு குறைவில்லாமலும் சுகதேகியாக வாழவும் இறைவனை வேண்டி பிரார்த்தித்தல் சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கமாகும்.

20.ஏடு தொடக்குதல் என்பதன் பொருள் யாது?

- கல்வியை தொடங்குதல் என பொருள்படும்.

21.ஏடு தொடக்குதல் வேறு எப் பெயரால் அழைக்கப்படுகிறது?

- வித்தியாரம்பம்.
- அட்சர அப்பியாச ஆரம்பம்.

22.ஏடு தொடக்குதல் என பெயர் வரக்காரணம் யாது?

- முற்காலத்தில் ஓலையிலான ஏட்டில் எழுதிய கல்வியை முன்னோர் கற்றார்கள் அதனால் முதலில் கல்வியை ஆரம்பிக்கும் போது ஏடு தொடங்குதல் என்று சொல்வது வழக்கமாகி விட்டது.

23.ஏடு தொடக்குதல் எக்கருமமாக காணப்படுகின்றது?

- அறிவை ஊட்டும் சுப கருமமாக விளங்குகின்றது.

24.ஏடு தொடக்குதல் எப்போது இடம்பெறுகின்றது?

- மூன்று அல்லது ஐந்து வயதானதும் விஜயதசமி அன்று அல்லது தைப்பூசத்தன்று ஏடு தொடங்குதல் நடைபெறுகின்றது.

25.ஏடு தொடக்குதல் எவ்வாறு நடைபெறுகிறது?

- கோயிலில் அல்லது வீட்டில் அல்லது பாடசாலையில் கும்பம் வைத்து பூசை வழிபாடுகள் செய்து கல்வியில் சிறந்த ஆசானின் ஆசியுடன் ஏடு தொடங்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

26.ஏடு தொடக்கும் குருவானவர் எவ்வாறு காணப்படுவர்?

- குருவானவர் வேட்டி அணிந்து விபூதி தரித்து தலைப்பாகை கட்டிக்கொண்டு இருத்தல் வேண்டும்.

27.குரு எவ்வாறு ஏடு தொடக்குவார்?

- குழந்தையை மடியில் இருத்தி ஏட்டை பிள்ளையின் கையில் கொடுத்து அகர முதலான எழுத்துக்களை சொல்லிக்கொடுத்தல் வேண்டும். பின் தட்டத்தில் பரவபட்டுள்ள பச்சையரிசியில் பிள்ளையின் விரலை பிடித்து எழுதுவித்தல் என்பன ஏடு தொடங்கும் முறையாகும்.

28.சுப நேரத்தில் ஏடு தொடக்குவதன் நோக்கம் யாது?

- கல்வியில் மேன்மையும், உண்மைப் பயனும் அடைய வேண்டும் என்பதற்காகவே சுபநாளில் ஏடு தொடக்கப்படுகின்றது.

## அலகுப்பரீட்சை ~ 05

## பகுதி – I

- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. மங்கல கருமங்களுள் அடங்குவது எது?

   1) ஏடு தொடக்குதல் 3) அந்தியேட்டி
   2) விளையாட்டு 4) விருந்தோம்பல்

2. பெயர் சூட்டுதலுக்கு வழங்கப்படும் மறுபெயர் யாது?

   1) நாம அர்ச்சனை 3) நாம கீர்த்தனை
   2) நாமகரணம் 4) நாம ரிதம்

- **கீறிட்ட இடத்தை நிரப்புக.**

(கர்ண வேதம், அன்னப்பிராசனம், வித்தியாரம்பம், பெயர் மந்திரம்)

3. காது குத்துதலை……………………எனவும் அழைப்பர்.
4. ஏடு தொடக்குதல்……………………எனவும் மறுபெயர் பெறுகிறது.

- **பின்வருவன சரியாயின்(✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

5. சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள் வாழ்வியல் சடங்குகள் ஆகும்.(………)
6. காது குத்தலுக்கு சிறப்பான நாள் பங்குனி உத்தரமாகும்.(………)

- **பின்வருவனவற்றைத் தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 7. சுபகருமம் | ஏடு தொடக்கல் |
| 8. அமங்கல கருமம் | அன்னப்பிராசனம் |
| 9. அட்சர அப்பியாச ஆரம்பம் | அந்தியேட்டி |
| 10. சோறூட்டல் | காது குத்துதல் |

## பகுதி – II

1. வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது?

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
…………………………………..

2. வாழ்வியல் சடங்குகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
…………………………………..

3. பெயர் சூட்டும் சடங்கின் முறையினை சுருக்கமாக தருக?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

……………………………………..

4. காது குத்துவதன் நோக்கங்கள் எவை?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………..

5. குரு எவ்வாறு ஏடு தொடக்குவார்?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

…………………………